**வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டததின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு முதல் 2022 வரையான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் தாமத்தின் காரணமாக 2022 ஏப்ரல் 29 ஆந் திகதி 9/17 தொகுதியின் கீழ் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 வரை செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

எனது இந்த அறிக்கையின் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SLFRS for SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் பந்தி இலக்கம் 10.23 இன் பிரகாரம் முன்னைய காலப் பகுதியின் தகவல்கள் வெளிப்படுத்தலின் கீழ் அவற்றின் தன்மை, தாக்கங்கள் ஏற்படுகின்ற நிதிக் கூற்றில் ஒவ்வொரு வரிசை விடயங்களுக்காகவும் சரி செய்யப்படும் பெறுமதி போன்றவைகள் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு வெளிப்படுத்தப்படாமல் முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 68.10 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது அதனைத் தயாரிப்பதற்கு தேவையான சரியான வழிகாட்டிகளை ஸ்தாபித்து நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் பந்தி இலக்கம் 18.24 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 1.02 மில்லியன் பெறுமதி உடைய கணனி மென் பொருள் முறைமையினா காலக் கழிவு முறைமை மற்றும் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதில் மாற்றங்கள் காணப்படுமாயின் பந்தி இலக்கம் 10.15 முதல் 10.18 இன் பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து தேவையான சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நியமத்தின் பந்தி இலக்கம் 17.19 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 42.72 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்களின் பயன்தரு ஆயுட்காலம் திருத்தப்படாமல் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இதனை எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து தேவையான சீராக்கங்களை நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் பந்தி இலக்கம் 28.43 இன் பிரகாரம் நிறுவனம் ஒன்று அதன் ஊழியருக்கு வழங்குகின்ற ஒவ்வொரு தொகுதிகளின் கீழான சேவையை முடிவுறுத்தும் நலன்கள் தொடர்பாக நலன்களின் தன்மை, அதன் கடப்பாட்டுப் பெறுமதி போன்றவை வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இதனை எதிர்காலத்தில் உரிய பிரகாரம் தயாரித்து கணக்காய்விற்காக சமர்ப்பிதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு சொந்தமான 07 ஹெக்ரேயர் அளவான காணியில் 21 பகுதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது 06 காணிக் கூறுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்துதலில் வசதியீனத்தின் அடிப்படையில் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாமையின் காரணமாக இது வரை கணக்குகளில் சீராக்குவதற்கு முடியாதிருந்தது. | காணி கூறுகளை மதிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் முறையே 05 வங்கிக் கணக்குகளின் வரவு மீதி ரூபா 218.77 மில்லியன் மற்றும் 06 வங்கிக் கணக்குகளில் மேலதிக பற்று மீதி ரூபா 33.46 மில்லியன் ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் வங்கி உறுதிப்படுத்தலை பரீட்சித்த போது 06 வங்கிக் கணக்குகளுக்கு உரிய வரவு மீதி ரூபா 229.7 மில்லியன் தொகையும் 03 வங்கிக் கணக்குகளுக்கு உரிய மேலதிகப் பற்று மீதி ரூபா 24.35 மில்லியன் தொகையும் காணப்பட்டது. 02 வங்கிக் கணக்குகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் 06 வங்கிக் கணக்குகளுக்கு உரிய நிதி நிலைமைக் கூற்றில் காசு மீதிக்கும், வங்கி உறுதிப்படுத்தலுக்கும் இடையே ரூபா 11.00 மில்லியன் வேறுபாடும், 03 வங்கிக் கணக்குகளுக்கு உரிய மேலதிகப் பற்று மீதியில் ரூபா 9.11 மில்லியன் வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பான விடயங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வங்கி மீதிகள் வங்கி உறுதிப்படுத்துதலுடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | 2013 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபத்திற்கு உரிய இரத்தினபுரி மற்றும் காலியில் அமைந்துள்ள இரண்டு காணிக் கூறுகள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் அடகு வைக்கப்பட்டு 08 மாதங்களில் செலுத்தி தீர்க்கும் அடிப்படையில் ரூபா 75.00 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் தொகைக்காக நிலுவை வட்டியான ரூபா 35.76 மில்லியன் செலுத்தப்படாது இருந்ததுடன் அடகு வைக்கப்பட்ட இந்த காணி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவத்தால் விடயங்களை விசாரித்து சட்டப் பிரிவின் மூலம் அந்த நடவடிக்கைகள் தொடர்பாக கண்டறிவதுடன் அந்த தகவல்களின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கம்பனிக்கு சொந்தமான காணிகளை அடகு வைத்துப் பெறப்பட்ட கடனை மீண்டும் செலுத்துதல் தொடர்பாக கால ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மக்கள் வங்கியில் இருந்தும், இலங்கை வங்கியில் இருந்தும் பெறப்பட்ட கடன் தொகை ரூபா 510.00 மில்லியன் ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நீண்டகால பெறுவனவாக ரூபா 510.52 மில்லியன் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 0.52 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு கிடைத்த ரூபா 510.52 மில்லியன் தொகை சரியாகக் கணக்கிடப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று பெறப்பட்டுள்ளது. அதற்குரிய பெறுவனவு விபரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக் கொடை ஒதுக்கீடுகள் ரூபா 27.51 மில்லியன் ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 29.76 மில்லியன் ஆனமையால் நிதிக் கூற்றுக்களில் பட்டோலையின் பிரகாரம் பணிக் கொடை ஒதுக்கீடுகளில் ரூபா 2.25 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இணங்குவதுடன் 2019 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் சரி செய்து சமர்ப்பிக்கப்படும். | வேறுபாடுகளைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 102.56 மில்லியன் ஆன வருமானம், கடன் பட்டோர் பெறுவனவுகள், முற்பண பெறுவனவுகள் போன்றவையாக இனங்காணப்படாமல் செலுத்த வேண்டிய செலவினத்தின் கீழ் நேர் வைப்புக்கள் என்ற பெயரில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1.61 மில்லியன் இனங்காணப்படாத வங்கி வைப்பு ஆண்டின் ஆரம்பத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் பிழையாக சீராக்கப்பட்டிருந்தது. | இந்த நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 102.56 மில்லியனை இனங்காண்பதற்கு வசதியீனத்தின் அடிப்படையில் அதனை நேரடியான இனங்காணப்பட்ட பின்னர் கணக்குகளில் சீராக்குவதற்காக செலுத்த வேண்டிய செலவினமாகக் காண்பிக்கப்பட்டு அதற்கு அது வரையில் வங்கியின் மூலம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதனை இனங்கண்ட பின்னர் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடி வைப்புக்களை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2019 ஆம் ஆண்டின் போது கணனி முறைமை தரவுகள் அழிவடைந்ததாக கம்பனியால் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக காசேட்டின் மீதி சரியாக கண்டறிய முடியாதிருந்தமையால் மீளாய்வாண்டின் காசேட்டின் ஆரம்ப இறுதி மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் 09 வங்கிக் கணக்குகளுக்கு உரிய நிதிப்பிரமாணம் 395 இன் பிரகாரம் மாதாந்த வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக காசு மற்றும் வங்கி மீதிகளுக்கு இடையே காணப்பட்ட | ஏற்றுக்கொள்கின்றோம். இது 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு இடையிலாக இருந்ததுடன் காசேடு தயாரித்து சரியான முறையில் வங்கி இணக்கக் கூற்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன் பின்னர் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | காசேடும், வங்கி இணக்கக் கூற்றும் சரியாகவும் கால ரீதியிலும் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாடுகள் மற்றும் அதற்கான காரண விடயங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | |
| (ஏ) | நிதி நிலைமைக் கூற்றில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் பிற்போட்ட வருமானமாக உள்ளடக்கப்பட்டிருந்த இழப்பீட்டு கொடுப்பனவுக்காக அரசாங்கத்தின் நிதி உதவி பெறுவனவு ரூபா 38.29 மில்லியன் தொகை 2018 ஆம் ஆண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2009 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் ஊழியர்களுக்காக தமது விருப்பத்தில் ஓய்வு பெற்றுச் செல்லும் இழப்பீட்டு முறைமை ஒன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய மீதி அரசாங்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டு அவற்றின் கொடுப்பனவுகளுக்கு உரிய தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டதன் காரணமாக இந்த மீதி 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற அரசாங்கத்தில் இருந்து கிடைத்த இழப்பீட்டுப் பணம் உரிய காலப் பகுதியின் போது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியால் பெறப்பட்டிருந்த தேறிய இலாபம் ரூபா 167.2 மில்லியன் ஆக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 927.09 மில்லியன் ஆகும். அவ்வாறே அத்திகதியில் கம்பனியின் மொத்த சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் ரூபா 930.22 மில்லியன் அதாவது 169 சதவீதம் ஆக காணப்பட்டது. மேலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கடன் குறித்துரைத்த பிரகாரம் மீள செலுத்தாமையின் காரணமாக கடனுக்காக பிணை வைக்கப்பட்ட கம்பனியின் ஆதனங்கள் சட்ட ரீதியாக கையேற்பதற்காக பல்வேறு தரப்பினரால் உரித்து கோரப்பட்டிருந்தது. இந்த விடயங்களின் பிரகாரம் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற நிலைமை ஒன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.<br><br>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பந்தி இலக்கம் 3.8 மற்றும் 3.9 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது முகாமைத்துவத்தால் நிறுவனம் தொடர்ச்சியாகப் பேணிச் செல்லும் இயலுமை தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அது தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை ஒன்று காணப்படுமாயின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது முகாமைத்துவம் மீள் கட்டமைக்கும் முறைமை ஒன்றில் சகல பிரிவுகளும் அவதானிக்கப்பட்டு வழங்கலில் இருந்து உச்ச அளவில் பயன்பாட்டை பெற்றுக் கொள்ளல் மற்றும் தொடர்ச்சியான இருப்பை பேணிச் செல்வதற்கு கடன் மீள் கட்டமைப்பதற்கும் எதிர் பார்க்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தால் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு நிச்சயமற்ற நிலைமை ஒன்று காணப்படுமாயின் வெளிப்படுத்துவதற்கும், கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வேண்டும். எனினும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளுக்கு இடையே தொடர்ச்சியான இருப்பு தொடர்பான குறிப்பு இலக்கம் 2.13 இன் மூலம் நியமத்தின் தேவையின் பிரகாரம் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

மேலும் கம்பனியால் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் பங்கு உரிமையாளரின் அதி விசேட பொதுக் கூட்டம் ஒன்று கோரி கம்பனிக்கு அறிவிப்பதற்கு வேண்டி ஏற்பட்டிருந்த நட்டங்களின் தன்மை, அளவு மற்றும் நட்டங்களுக்கான காரணம், இவ்வாறான நட்டம் ஏற்படுவதை தடுப்பதற்கு அல்லது நட்டங்களை மாற்றி அமைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்குமாயின் பணிப்பாளர் சபையினால் அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று பங்கு உரிமையாளர்களுக்கு அனுப்ப வேண்டிய போதிலும் அந்த தேவையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த விடயங்களின் பிரகாரம் முகாமைத்துவத்தால் கம்பனியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | வியடம் | தொகை<br>ரூபா<br>மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு | 115.63<br>87.50 | விரிவான பட்டோலை மற்றும் முறையான விரிவான பொருள் மெய்மையாய்வு அறிக்கை | தற்போது சொத்துக்கள் பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்கள் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வுக்காக விரிவான பட்டோலை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | விற்பனைக்கான இருப்புக்கள் | 46.89 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை மற்றும் இருப்பு பேரேடு | ஏற்றுக் கொள்கின்றோம். 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருப்பு மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்து இருப்பின் பெறுமதி இறுதிக் கணக்குகளின் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நானாவித முற்பணம் | 3.35 | முற்பண பதிவேடு மற்றும் உரிய மூல சான்றுகள் | இந்தப் பணம் 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் நிறுவனத்திற்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் காணப்பட்டது. | இறுதிக் கணக்கில் காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு மீதிகளுக்கும் விரிவான தகவல்கள் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| (ஈ) | 09 அரசாங்க நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டிருந்த கடன் மற்றும் முற்பணம் | 941.39 | கடன் உடன்படிக்கை அல்லது ஏனைய உதவி ஆவணங்கள், விபரம் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் | அதற்குரிய மூல ஆவணங்கள் மற்றும் உரிய கோவைகள் நிறுவனத்தில் காணப்படுவதுடன் இதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கை, நிபந்தனை, கடனுக்காக அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கம்பனி பேணிச் செல்லல் வேண்டும். |
| (உ) | மக்கள் வங்கி கடன் | 2.02 | மீதி தொடர்பான விபரம் மற்றும் உறுதிப்படுத்தல் | பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2 மில்லியனுக்கு உரிய கடன் மீள செலுத்தபடுகின்றமையால் கடன் மீதிகளில் குறைக்கப்பட்டு கடன் மீதி காண்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை தீர்த்து வைத்தல் சரியாக கணக்கீடு செய்வதை கண்காணித்தல் வேண்டும். |
| (ஊ) | வங்கிப் பிணை | 36.37 | மீதி உறுதிப்படுத்தல் | நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 36.37 மில்லியன் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்படுகின்ற தொகை 2018 ஆம் ஆண்டுக்கு உரிய வங்கியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெளித் தரப்பினரிடம் இருந்து பெறப்பட்ட பணம் தொடர்பான காரணங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | உரிமை மூலதனத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட ஒதுக்கம் | 16.11 | மூல ஆவணங்கள், பட்டோலைகள், உரிய அங்கீகாரம் | அது தொடர்பான தகவல்கள் தற்போது வரை நிறுவனத்திற்கும் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இவ்வாறான கணக்குகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய வரி | 94.02<br>47.00 | விரிவான பட்டோலை, வரி அறிக்கை, வரி அறிக்கை | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த வரிகளுக்குரிய சகல தகவல்களும் தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய வரி உரிய கால எல்லையில் தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஐ) | முன்னைய ஆண்டின் சீராக்கம் | 68.00 | விரிவான பட்டோலை | ஏற்றுக் கொள்கின்றோம். தற்போது அதனை தயாரிப்பதற்குத் தேவையான சரியான வழிகாட்டி ஒன்றை ஸ்தாபித்து நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதிக் கணக்கில் காண்பிக்கபடுகின்ற ஒவ்வொரு மீதிகளுக்கும் விரிவான தகவல்கள் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| (ஒ) | செலவினம் | 8.31 | கொடுப்பனவு உறுதிச்சீட்டு | ஏற்றுக்கொள்கின்றோம். அது இயலுமானவரை விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் தொடர்பாக தயாரிக்கப்படுகின்ற மூல சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தலை கண்காணித்தல் வேண்டும். |
| (ஓ) | பெயரிடப்படாத கடன் கொடுத்தோர் மீதி | 138.58 | சரியான தன்மையின் இருப்பு போன்றவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான சான்றுகள் | இதுவரை மீதி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தமையால் இந்த மீதியை சரியாக சீராக்குவதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு மீதிக்கும் விரிவான தகவல்களை வழங்ககக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| ஒள) | பெயரிடப்படாத கடன் பட்டோர் | 60.60 | கடன்பட்டோரின் பெயர் அல்லது குறியீடுகள் போன்ற சான்றுகள் | இதுவரை மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தமையால் இசரியான மீதியை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சகல மீதிக்கும் விரிவான தகவல்களை வழங்ககக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| (க) | செலுத்த வேண்டிய குத்தகை தவணை | 0.95 | குத்தகை உடன்படிக்கை, செலுத்தப்பட்ட குத்தகை தவணை தகவல்கள் | 2018 ஆம் ஆண்டின் போது சகல குத்தகை தவணைகள் செலுத்தப்பட்டுள்ளமையால் இதற்குரிய சகல தகவல்களும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. | செலவினங்களுக்கான மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத் திற்கு செலுத்த வேண்டிய முற்பணத் தொகை | 50.00 | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி உறுதிப்படுத்தல் | முகாமைத்துவத்தால் கருத்துரை தெரிவிக்கப்பட வில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கபடல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 33.60 மில்லியன் ஆகும். அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்தும் தீர்த்து வைக்கப்படாத பெற வேண்டிய பணம் ரூபா 33.38 மில்லியன் ஆகும். | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்காக கடன் அறவிடும் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அறவிடுவதற்கு முடியுமான கடன் தொகையை அறவிடுவதற்கும், அறவிட முடியாத தொகை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும். |
| (ஆ) | 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்படுத்தப்பட்ட சூரிய பொக்குள தெபக்காவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீட்டு உரிமையாளர்களுக்கு தேவையான கட்டிடப் பொருட்கள் அம்பலான்தோட்ட, தங்காலை, லுணுகம்வெஹர, திஸ்ஸ, வீரகெட்டிய, எம்பிலிபிட்டிய, சூரியவெவ என்ற கம்பனியின் கிளை களஞ்சியங்களில் இருந்து எந்த ஒரு வரையறையும் இன்றி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போதும் ரூபா 2.62 மில்லியன் பெறுதியான கட்டிடப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 யூன் 30 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்ட கட்டிடப் பொருட்களுக்காக அறவிட வேண்டிய தொகை ரூபா 34.69 மில்லியன் ஆகும். | கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்ற பொருட்களுக்காக பணத்தை அறவிடுவதற்காக கிளை முகாமையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இது வரையில் கடனை அறவிடுவதற்காக நிறுவனத்தில் 03 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | பொருள் கடன் அடிப்படையில் வழங்கும் போது உரிய திட்ட முறைமையின் அடிப்படையில் மீண்டும் அறவிடும் இயலுமையை உறுதிப்படுத்தி வழங்குதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூன் 30 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 130.46 | செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துதல், பெற வேண்டிய பண பெறுவனவுகளின் பெறுமதியின் அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் | கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களை |

| | | |
|---|---|---|
| மில்லியன் ஆகும். அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்தும் தீர்த்து வைக்கப்படாத செலுத்த வேண்டிய பணம் ரூபா 130.14 மில்லியன் ஆகும். | மேற்கொள்ளப்படுகின்றது. | விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2016 மாச்சு 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தி மற்றும் 3.2.7 ஆம் பந்தி | ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடுத்துவரும் ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து அது தொடர்பாக யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதி பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதும் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவி ல்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2017 யூன் 28 ஆம் திகதி MF/CG/02/(cir) ஆம் இலக்கத்தில் விநியோகிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 | நிறுவனத்தால் அலுவகல உபகரணங்கள் மற்றும் தளபாட பொருட்கள் தொடர்பான தகவல்கள் கொன்ரோலர் ஜனரால் இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்ளவில் லை. 2023 ஆம் ஆண்டிற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள து. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 167.21 மில்லியன் தேறிய நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 86.60 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 80.61 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 72 சதவீதத்தால் வருமானம் குறைவடைந்தமை, நிதி மற்றும் ஏனைய செலவினங்களின் அதிகரிப்பு என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

கம்பனியின் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை நிதி செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் கம்பனியின் தேறிய நட்ட விகிதம் (-3.5) முதல் (-75.0) வரை அதிகரித்து இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| விபரம் | 2014 | 2015 | 2016 | 2017 | 201 2018 |
|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா) | 584,303,933 | 357,274,033 | 708,311,979 | 807,986,328 | 222,685,350 |
| மொத்த இலாபம் (ரூபா) | 73,419,302 | 23,768,457 | 26,666,588 | 84,710,912 | 6,823,996 |
| மொத்த இலாப விகிதம் (%) | 13 | 7 | 5 | 10 | 3 |
| தேறிய இலாபம் வரிக்கு முன் | (20,377,779) | (60,609,648) | (94,711,011) | (86,600,540) | (167,208,235) |
| தேறிய இலாப விகிதம் (%) | -3.5 | -17.0 | -13.0 | -11.0 | 75.0 |

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| விகிதம் | 2018 | 2017 |
|---|---|---|
| திரவ விகிதம் - நடைமுறை விகிதம் | 1:1.02 | 0.46:1 |
| கடன் விகிதம் - புரள்வு விகிதம் | -101% | 62% |

நடைமுறை விகிதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதிகரிப்பைக் காண்பித்த போதும் ஒட்டு மொத்தமாக கீழ் மட்டத்தில் காணப்பட்டது. உரிமை மூலதனம் மறைப் பெறுமதியாக இருந்தமையால் கடன் பெறுமதி மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் கீழ் உள்ள 03 ஏக்கர் 3.5 றூட் 17 பேர்ச் பெறுமதியான மொறட்டுவ, அநுராதபுரம், அம்பாறை, மொனராகலை இல் அமைந்துள்ள காணிகளுக்கான உரித்து உறுதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் அநுராதபுரம், எம்பிலிப்பிட்டி, கண்டி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, நுவரெலியா இல் அமைந்துள்ள 04 ஏக்கர் 0.5 றூட் 9.1 பேர்ச் அளவான 07 காணிகளுக்காக நில அளவையாளர் திட்டமும் காணப்படவில்லை. அவ்வாறே இலக்கம் 549/A, பொறுபன, மொரட்டுவ காணியை | இந்த காணிக்காக நில அளவையாளர் திட்டம் பெற்றுக் கொள்வதற்கும் மிகுதி காணிகளுக்காக உரித்து உறுதியை பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அவ்வாறே தீர்த்து வைத்தல் காணி அபிவிருத்தி செய்து வருமான வழி ஒன்றை உழைப்பதற்காக மிகுதி நடவடிக்கைகள் | காணிகளின் உரித்தை விரைவாக கையேற்றல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்பதற்காக 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய மற்றும் இலக்கம் அமப/19/2192/122/076 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் காணியின் உரித்து கம்பனிக்கு பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும் கம்பனியால் காணியின் உரித்துக்கு உரிய உரித்துறுதி தயாரித்து காணியை கையேற்பதற்கு 2024 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டமிடப்படுகின்றது. | |
| (ஆ) | ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கம்பனிக்கு சொந்தமான காணியில் 100 பேர்ச் காணியின் அளவு ஒன்று இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியனுக்கு விற்பனை செய்வதன் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் கம்பனியால் 2018 ஒக்தோபர் மாதம் 23 ஆம் திகதிய இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் உரிய தொகையான ரூபா 70 மில்லியன் தொகையுடன் கடன் மேலதிக பற்றாக செலுத்த வேண்டிய வட்டியும் உள்ளடக்கி ரூபா 199.05 மில்லியன் தொகை ஈடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை வங்கி மேற்குறிப்பிடப்பட் தொகையை ஈடு செய்து தயாரித்து அவற்றில் உள்ள உரித்து உறுதியின் பெறுமதிக்கு உரிய முத்திரைக் கட்டணமாக ரூபா 5.38 மில்லியன் தொகை மீண்டும் காணியை கையேற்க வேண்டியிருந்த போதிலும் 2023 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் இந்த முத்திரைக் கட்டணம் 2023 ஆம் ஆண்டின் போதும் மிகவும் உயர்ந்த பெறுதியால் அதிகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | மாகாண இறைவரித் திணைக்களத்தின் மூலம் காணி மீண்டும் மதிப்பீடு செய்து முத்திரைக் கட்டணம் ரூபா 18,390,000 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. அதனைக் குறைத்துக் கொள்வதற்கு மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதுவரை அந்த கோரிக்கைக்கு பதிலளிக்கப்படவில்லை. | உரிய முத்திரைக் கட்டணத்தை செலுத்தி காணியை உரிய பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 417/ஏ, கடை வீதி கிழக்கு, புகையிர நிலைய வீதி, மாத்தறை என்ற காணியில் 01 றூட் 2.8 பேர்ச் அளவான தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அனுமதியற்ற வகையில் பயன் படுத்தப்பட்டதுடன் 03 றூட் 35.6 பேர்ச் அளவான அநுராதபுரக் காணியும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த போதும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது காணியை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கம்பனிக்கு சொந்தமான காணிகளின் பாதுகாப்புத் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 யூலை 19 மற்றும் 2006 ஒக்தோபர் 03 ஆம் திகதிகளில் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில், கொழும்மு 12, சங்கராஜ மாவத்தை இலக்கம் 541 இல் அமைந்துள்ள இலக்கம் 1762 என்ற நில வரைபடத்தின் கூறு இலக்கம் A மற்றும் B என்ற 03 றூட் 3.2 பேர்ச் மற்றும் இலக்கம் 5107 நில வரைபடத்தின் லொட் இலக்கம் A இல் 15 பேர் மற்றும் இலக்கம் 4365 நில வரைபடத்தின் லொட் இலக்கம் 01 இன் அளவில் 01 றூட் 13.20 பேர்ச் அளவு கம்பனியால் HDFC ரியல் எஸ்டேட் டெவலெப்மன்ட் லிமிடட் நிறுவனத்திற்கு ரூபா 222.50 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். உரிய காணி 2022 நவம்பர் மாதம் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் உரித்து HDFC வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. | காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் அதிகாரம் கையளிக்கும் சான்றிதழ் பத்திரத்தால் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த இந்த காணி தொடர்பாக அதில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்குச் சொந்தமான குங்குனியார் உப்புக்குளம் கரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் காணி மற்றும் நுவரெலியா பம்பரகெலே கட்டிடம், எம்பிலிப்பிட்டி யோதகம இல் அமைந்துள்ள 02 வீடுகள் என்பன 2017 ஆம் ஆண்டு முதல் பயன் படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | யாழ்ப்பாணக் காணி தீர்த்து வைக்கப்பட்ட காணி ஆகும். அபிவிருத்தி செய்து வருமான வழிகளை ஏற்படுத்துவதற்காக மிகுதி நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றது. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஆ) மற்றும் 9.3.1(i) பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உரிய அங்கீகாரம் பெற்ற ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்று என்பன கம்பனியிடம் காணப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். PED/12 சுற்றறிக்கை பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் பீஈடீ/12 என்ற 2023 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவிற்குப் புறம்பாக மீளாய்வாண்டிற்கான வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 04 வருடங்களும் 08 மாத காலம் தாமதத்துடன் 2023 ஒக்தோபர் 27 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் அடிப்படையில் கணனி முறைமை அழிவடைந்தமை மற்றும் தரவுகள் அழிவடைந்தமை தொடர்பாக 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் செயல் முன்னேற்றம் தொடர்பாக இதுவரை தகவல்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட வில்லை. | கணனி முறைமை அழிவடைந்ததுடன் உள்ளடக்கப்பட்டிருந்த தரவுகள் அழிவடைந்ததன் காரணமாக மீண்டும் தரவுகளை கணனி முறைமைக்கு உள்ளடக்கி கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (iii) 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்றும், அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றும் தயாரித்து ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உரிய திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது இதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் பாதீடு தயாரிக்கப்படாதிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |